வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : CC 135 of 2018

வழக்கு சாட்சி - PW 9

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. ராமசாமி | தொழில் | : | விவசாயம் |
| தந்தை பெயர் | : | முத்துசாமி | வயது | : | |
| கிராமம் | : | வேலம்பட்டி | | | |
| தாலுக்கா | : | திருப்பூர் தெற்கு | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 07.07.2025.

(எதிரி ஆஜர்).

**முதல் விசாரணை தொடர்ச்சி :** **நாள் : 07.07.2025.**

1) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு வருகிறேன் கடந்த 25.08.2016 மாலை 4.45 மணிக்கு நானும் என் பக்கத்து தோட்டக்காரர் பொன்னுசாமியும் தாராபுரம் - திருப்பூர் செல்லும் ரோட்டில் பல்லக்காட்டு தோட்டததிற்கு முன்பாக நின்று கொண்டு பேசிக்கொண்டிருந்தோம் அப்போது கார்த்திக் சரவணன் ஆகிய இருவரும் தெற்கில் இருந்து வடக்கு நோக்கி திருப்பூர் - தாராபுரம் ரோட்டில் வந்தார்கள் அப்போது அதே ரோட்டில் வடக்கில் இருந்து தெற்கு நோக்கி வந்த கார் ஒன்று ரோட்டின் மேல் புறம் சென்று இருச்சக்கர வாகனத்தின் மீது மோதியது அதில்அவர்கள் இருவரும் தூக்கி வீசப்பட்டார்கள் அதில் அவர்கள் இருவருக்கும் காயம் ஏற்பட்டத்தில் மயங்கிய நிலையில் இருந்தார்கள் அவர்களை நானும் பொன்னுசாமியும் பார்த்து ஆம்புலன்ஸ் மூலமாக திருப்பூர் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம் . அந்த காரின் பதிவெண் (9100) ஆகும், மருத்துவமனைக்கு செல்லும் வழியில் கார்த்தின் இறந்துவிட்டதாக தெரிந்துக்கொண்டேன் சரவனனுக்கு கை கால் ஆகிய இடங்களில்அடிப்பட்டிருந்தது.

விபத்து ஏற்படுத்திய கார் ஓட்டுநரை பார்த்தேன் .ஆஜர் எதிரி தான் விபத்து ஏற்படுத்திய கார் ஓட்டுநர் ஆவார். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> :

1) நான் எந்த வகுப்பு வரை படித்தேன் என்றால் 5 ஆம் வகுப்பு வரை படித்தேன். இந்த விபத்து நடக்கும் போது எனது தோட்டத்து பகுதியில் இருந்தேன் என்றால் ரோட்டிற்கு மேலே நின்று பேசிக்கொண்டிருந்தேன். நான் எந்த திசையில் நின்று பேசிக்கொண்டிருந்தேன் என்றால் தென் வடல் ரோட்டிற்கு பார்த்தவாறு தெற்கு திசையில் நின்றுகொண்டிருந்தேன். சம்பவ இடததிற்கும் நான் நின்று கொண்டிருந்த இடததிற்கும் இடையே சுமார் எவ்வளவு துாரம் இருக்கும் என்றால் 70 அடி துாரம்.

2) சத்தம் கேட்டு தான் நான் பார்த்தேன் என்றால் இல்லை சம்பவம் என் கண் எதிரே நடந்தது. சம்பவம் நடந்த பிறகுதான் யார் யார் என்ன என்ன வாகனத்தை ஓட்டி வந்தார்கள் என்று எனக்கு தெரியும் என்றால் காரை ஆஜர் எதிரி ஓட்டி வந்தார். இந்த சம்பவம் குறித்து போலீசார் என்னை எப்போது என்னை விசாரித்தார்கள் என்றால் சம்பவம் நடந்து ½ மணி நேரத்தில் விசாரித்தார்கள் . பின்ப மறுநாள் வந்த சம்பவம் நடைப்பெற்ற இடத்தை காண்பிக்க சொன்னார்கள். ஆஜர் எதிரிதான் காரை ஓட்டி வந்தார் என்பதற்காக போலீசாரிடம் அடையாளம் காண்பித்தேனா என்றால் அவர் தான் கார் ஓட்டி வந்தார் என்று காண்பித்தேன். நான் அடையாளம் காண்பித்தபோது அவரது பெயர் மற்றும் ஊர் எனக்கு தெரியாது என்றால் சம்பவத்திற்கு பின் தெரிந்துக்கொண்டேன். சம்பவத்தின் போது எதிரி என்ன உடை அணிந்து வந்திருந்தார் என்ன உடல் வாகு என்று எனக்கு தெரியுமா என்றால் பல வருடம் ஆனதால் ஞாபகம் வரவில்லை.

3) விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் நிறம் மற்றும் எந்த மாறியான வாகனம் என்றால் சிகப்பு கலர் என்று நினைக்கிறேன் என்ன மாதிரியான கார் என்று எனக்கு தெரியாது . விபத்தில் இறந்துபோன கார்த்தி ஓட்டி வந்த வாகனம் என்ன என்று எனக்கு தெரியுமா என்றால் இறந்த நபர் TVS இருசக்கர வாகனம் ஓட்டி வந்தார். விபத்தில் காயம் பட்ட நபர் தலையில் தலைகவசம் அணிந்திருந்தார் என்று எனக்கு தெரியுமா என்றால் கார்த்தி அணிந்திருந்தார்கள் மற்றொருவர் அணிந்திருந்தாரா என்றால் எனக்கு தெரியாது. மேற்கு திசையில் விபத்து ஏற்படுத்தியதாக சொல்லப்படும் வாகனம் சென்றபோது அதற்கு முன் என்ன வாகனம் சென்றது என்று எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. கார் திருப்பூரில் இருந்து தாராபுரம் செல்லும் ரோட்டில் கிழப்புறமாக செல்லும் என்றால் அவ்வாறு இல்லை. இந்த விபரங்கள் போலீசார் சொல்லிதான் எனக்கு தெரியும் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் எனக்கும் சம்பந்தமில்லை போலீசார் சொல்லிதான் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

S SAPNA Digitally signed by S SAPNA Date: 2025.07.07 16:22:07 +0500

நீதித்துறை நடுவர்,

பல்லடம்.